| மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்<br>Western Provincial Education Department<br>ஆண்டிறுதிப் பரீட்சை- 2021<br>Third Term Evaluation- 2021 | | |
|---|---|---|
| தரம்: 10 Grade- 10 | பாடம்: இஸ்லாம் Subject: Islam | Paper I & II |
| **Marking Scheme** | | |

## பகுதி- I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | *1* | 11. | *1* | 21. | *2* | 31. | *2* |
| 02. | *4* | 12. | *4* | 22. | *2* | 32. | *3* |
| 03. | *3* | 13. | *2* | 23. | *3* | 33. | *1* |
| 04. | *4* | 14. | *1* | 24. | *4* | 34. | *4* |
| 05. | *2* | 15. | *3* | 25. | *3* | 35. | *2* |
| 06. | *1* | 16. | *1* | 26. | *1* | 36. | *3* |
| 07. | *4* | 17. | *3* | 27. | *2* | 37. | *1* |
| 08. | *2* | 18. | *4* | 28. | *3* | 38. | *2* |
| 09. | *3* | 19. | *2* | 29. | *4* | 39. | *3* |
| 10. | *4* | 20. | *2* | 30. | *4* | 40. | *4* |

(1 X 40 = 40)

## பகுதி- II

**01.** I. அல்மாஉல் கஸீர்- அதிக நீர். குல்லதைன் அளவை விட கூடுதலான மிகச் சுத்தமான நீர். அல்மாஉல் கலீல்- குறைந்த நீர். குல்லதைன் அளவை விட குறைந்த மிகச் சுத்தமான நீர்.

II. நீரின்மை, கடுமையான நோய், குடிப்பதற்கு மாத்திரம் போதுமானளவு நீர் காணப்படுதல்.

III. இபாதத்- அல்லாஹ்வை வணங்கி வழிபடுதல், இமாரத்- பூமியை வளப்படுத்துதல்

IV. இரு வகைப்படும். பர்ளு ஐன், பர்ளு கிபாயா.

V. லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். (لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرُ)

VI. ஸூரா லுக்மான், ஸூரா ஃபுர்கான்

VII. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல், படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்

VIII. மீளுதல், திரும்புதல்

IX. ஹாபில்: பயிர்ச்செய்கை, காபில்: கால்நடை வளர்ப்பு

X. ஆரோக்கியம், ஓய்வு (2 X 10 = 20)

**02.** I. அல்குர்ஆன், ஸுன்னா (02 புள்ளிகள்)

II. ஸஹாபாக்கள் ஹதீஸ்களை பிழையின்றி மனனமிட்டனர், ஸஹாபாக்களில் எழுத்தறிவுள்ளோர் எழுதிப் பாதுகாத்தனர், ஸஹாபாக்கள் தமக்குத் தெரிந்த ஹதீஸ்களை பிறருக்கு சாட்சிகளுடன் அறிவித்தார்கள். ஸஹாபாக்கள் ஹதீஸ்களை நடைமுறைப்படுத்தினர். (ஏதாவது 3 எழுதியிருந்தால் 03 புள்ளிகள்)

III. ஸுன்னாவைப் புறக்கணித்துவிட்டு அல்குர்ஆனை விளங்கவோ செயற்படுத்தவோ சட்டம் வகுக்கவோ முடியாது. உதாரணம்: அல்குர்ஆன் தொழுமாறு ஏவுகிறது. எவ்வாறு தொழ வேண்டும், தோழ வேண்டிய நேரம், தொழும் முறை, தொழுகைக்கான விதிமுறைகள் அனைத்தையும் ஸுன்னா விளக்குகிறது. இம்ரான் பின் ஹுஸைன் (ரழி) அவர்களின் சம்பவம். உதாரணம்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்களிடம்

ஒருவர் ஜம்உ, கஸ்ரு பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதா எனக் கேட்டார். அதற்கு அவர்கள், அல்லாஹ் எங்களுக்கு நபி (ஸல்) அவர்களை தூதராக அனுப்பினான். அவர்கள் போன்றே நாமும் செய்கிறோம் என்றார்கள். சட்ட விதிகள் தொடர்பான விளக்கத்திற்கும் ஸுன்னா அவசியம். உதாரணமாக திருட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் கை துண்டிக்கப்பட வேண்டுமென குர்ஆன் கூறுகிறது. ஆனால், ஸுன்னாவோ சிறுவர் மற்றும் மனநோயாளர்களுக்கு விதிவிலக்களிக்கிறது. (இரண்டு உதாரணங்கள் தந்து விளக்கியிருந்தால் 05 புள்ளிகள்) (மொத்தம்: 2+ 3+ 5= 10)

03. I. ஒன்று சேர்த்தல், உறுதி கொள்ளல், ஏகோபித்த முடிவுக்கு வருதல். (02 புள்ளிகள்)

II. சமூகத்தில் ஒற்றுமை பேணப்படும், சமூகத்தில் கட்டுப்பாடு குலையாதிருக்கும், பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைக்கும். (03 புள்ளிகள்)

III. அல்அஸ்ல்: ஏற்கனவே அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தீர்வு சொல்லப்பட்டுள்ள பிரச்சினை அல்அஸ்ல் எனப்படும். அல்பர்உ: அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ, இஜ்மாஉவிலோ தீர்வு முன்வைக்கப்படாத, தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை அல்பர்உ ஆகும். இல்லத்: இரு பிரச்சினைகளுக்குமிடையில் அவதானிக்கப்படும் பொதுப் பண்பு அல்லது பொதுக் காரணி இல்லத் ஆகும். ஹுக்ம்: அல்குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. (05 புள்ளிகள்)
(மொத்தம்: 2+ 3+ 5= 10)

04. I. அறிவும் பண்பும் நிலவாத காலம் ஜாஹிலிய்யாக் காலம் எனப்படும். மற்றொரு கருத்து, இறைவழிகாட்டலுக்கு முரணாண வாழ்வு முறை நிலவிய காலம். (02 புள்ளிகள்)

II. போராட்டத்தில் ஈடுபடுவதற்காக ஆண்கள் தேவைப்பட்டனர், போரைத் தூண்டுவதற்காக, போரைத் தொடர்வதற்காக, போரை ஊக்குவிப்பதற்காக கவிஞர்கள் தேவைப்பட்டனர்.

III. மோசமான நடத்தைகள்: கொலை, மது, வட்டி, விபச்சாரம், பழிக்குப்பழி, வழிப்பறிக் கொள்ளை.

நற்பண்புகள்: மொழிப்புலமை, சுதந்திர வேட்கை, வாக்கு மீறாமை, விருந்தோம்பல், வீரம், எளிமை (05 புள்ளிகள்) (மொத்தம்: 2+ 3+ 5= 10)

05. I. கோட்பாட்டு ரீதியானவை, நடைமுறை சார்ந்தவை (02 புள்ளிகள்)

II. தூண எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாதிருத்தல், ஷரீஅத்தின் வரையறைகளை மீறாதிருத்தல் (3 புள்ளிகள்)

III. தெய்வீகத்தன்மை, எவருக்கும் அநீதி இழைக்காமை, நெகிழ்வுத்தன்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர்செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்குமிடையே இணக்கம் காணல், ஆத்மிக, லௌகிக தேவைகளை கவனத்திற் கொள்ளல்... (இவற்றில் ஏதாவது ஐந்தைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்) (மொத்தம்: 2+ 3+ 5= 10)

06. I. புலமை சார்ந்தவை: கற்பித்தல்- தாதி- இலிகிதர் - காழி... , உடலுழைப்பு சார்ந்தவை: சிற்றூழியத் தொழில், காரியாலய உதிரித் தொழில், காவல் பணி... (02 புள்ளிகள்)

II. தூண எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாதிருத்தல், ஷரீஅத்தின் வரையறைகளை மீறாதிருத்தல் (3 புள்ளிகள்)

III. தெய்வீகத்தன்மை, எவருக்கும் அநீதி இழைக்காமை, நெகிழ்வுத்தன்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர்செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்குமிடையே இணக்கம் காணல், ஆத்மிக, லௌகிக தேவைகளை கவனத்திற் கொள்ளல்... (இவற்றில் ஏதாவது ஐந்தைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்) (மொத்தம்: 2+ 3+ 5= 10)

**07. I. அஜ்னபியான ஆண்- பெண் கலந்துரையாடும்போது பேண வேண்டிய வரையறைகள்**

- பார்வையைத் தாழ்த்துதல்: அவ்ரத்தில் உள்ளடங்கும் பகுதியைப் பார்த்தல், ரசனையுடன் பார்த்தல், காரணமின்றி தொடர்ந்து பார்த்தல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல். – அவ்ரத்தை மறைக்கக்கூடிய வகையில் ஆடை அணிந்திருத்தல் - நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணல் - ஆண்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களிலிருந்தும் விலகியிருத்தல் - ஆண் பெண் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தல்… (05 புள்ளிகள்)

**II. உஸ்மான் (ரழி) அவர்களது கால அல்குர்ஆன் தொகுப்புப் பணி**

இவர்களது காலப் பிரிவில் ஆர்மேனியா, அஸர்பைஜான் பிரதேசங்களில் முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஆல்குர்ஆனை வெவ்வேறான முறைகளில் ஓதினர். தாம் ஓதும் முறையே சரியானது என்றும் வாதித்தனர். இதனை அவதானித்த ஹுதைபதுல் யமானி (ரழி) அவர்கள் கலீபாவுக்கு முறைப்பாடு செய்தார். உடனடியாக செயற்பட்ட கலீபா உஸ்மான் ஸைத் இப்னு ஸாபித் (ரழி) தலைமையில் குறைஷியரை உள்ளடக்கிய குழுவை நியமித்தார். அவர்கள் அபூபக்ர் (ரழி) கால முஸ்ஹஃபையும் குறைஷிகளின் மொழி வழக்கையும் கருத்திற் கொண்டு எட்டுப் பிரதிகளை தயாரித்தனர். அவை ஒவ்வொரு மாகாணத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் காரிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் பிரகாரமே ஓத வேண்டுமென்றும் முன்னர் வைத்திருந்த ஏனைய பிரதிகளை எரித்துவிட வேண்டுமென்றும் கலீபா கட்டளை பிறப்பித்தார். இதனால் எல்லோரும் ஒரே விதமாக அல்குர்ஆனை ஓதும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக உஸ்மர் (ரழி) ‘ஜாமிஉல் குர்ஆன்’ எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.
(5 புள்ளிகள்)

**III. கடுமையான நஜீஸும் அவற்றை சுத்தம் செய்யும் முறையும்**

நாய், பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், அவற்றின் வியர்வை, இரத்தம் போன்ற அனைத்தும் கடுமையான நஜீஸில் உள்ளடங்கும். நஜீஸ் உடலிலோ ஆடையிலோ பட்டு விட்டால் முதலில் அதனை அவ்விடத்திலிருந்து அகற்றி விட வேண்டும். பின்னர் நஜீஸின் மணம், சுவை, நிறம் என்பன நீங்கும் வரை கழுவ வேண்டும். ஏழு தடவைகள் கழுவ வேண்டும். ஒரு தடவை மண் கரைசலை உபயோகித்து கழுவ வேண்டும். கடுமையான நஜீஸ் படிந்த இடத்தில் மணம், நிறம், சுவை என்பன தென்படா விட்டாலும் ஏழு தடவைகள் கழுவ வேண்டும். (05 புள்ளிகள்)

**IV. அல்குர்ஆன் குறிப்பிடும் உள்ளத்தின் மூன்று நிலைகள்**

ஒன்று: நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூ:.- தீமையை ஏவும் உள்ளம், நன்மை செய்யத் தூண்டாத உள்ளம், இச்சைக்கும் ஷைத்தானுக்கும் அடிமைப்பட்ட உள்ளம்.

இரண்டு: நப்ஸுல் லவ்வாமா: தன்னையே நொந்து கொள்ளும் உள்ளம். இச்சைகளுக்கு எதிராக போராடுகின்ற பாவங்களில் ஈடுபட்டால் அதற்காக மனம் வருந்தி கைசேதப்படும் உள்ளம்.

மூன்று: அமைதியடைந்த உள்ளம். பதற்றம், தடுமாற்றமின்றி அமைதியடைந்த நிலையில் காணப்படும் இந்த உள்ளத்தில் நன்மைக்கான தூண்டுதல்களே மிகைத்துக் காணப்படும். (05 புள்ளிகள்)

**இறுதிப் புள்ளி:** **வினாப் பத்திரம் I (40 புள்ளிகள்)**

**வினாப் பத்திரம் II (முதலாம் வினா- 20 புள்ளிகள்)**

**(ஏனைய நான்கு வினாக்களுக்கு- 40 புள்ளிகள்)**

**மொத்தம்: 100 புள்ளிகள்**